செ.வெ.எண். 64/பிப்ரவரி தேதி : 24.02.2017

# தருமபுரி மாவட்டம், அரூர், கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2016-2017 அரவைப்பருவத்திற்கு பதிவு செய்யப்பட்ட கரும்பை ஆலை விதிகளுக்கு புறம்பாக எடுத்துச் செல்ல கரும்பு இடைத்தரகர்கள் முயற்சித்து வருவதால் ஆலைக்கும், அரசுக்கும் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது - மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!

தருமபுரி மாவட்டம், அரூர், கோபாலபுரம் சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 2016-2017 அரவைப்பருவத்திற்கு பதிவு செய்யப்பட்ட கரும்பை ஆலை விதிகளுக்கு புறம்பாக எடுத்துச் செல்ல கரும்பு இடைத்தரகர்கள் முயற்சித்து வருவதால் ஆலைக்கும், அரசுக்கும் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது.

இத்தகைய முயற்சியில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்தி சர்க்கரைத்துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆணைகள் பிறப்பித்துள்ளனர். ஆலையின் துணைவிதி 24 (5)-ன் படியும் கரும்பு கட்டுப்பாட்டுச் சட்டம் 1966 மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம் 1955-ன் படியும் காவல்துறை மூலம் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் ஆலைப்பகுதிக்குட்பட்ட பதிவில்லாத கரும்பினை எடுத்துச் செல்பவர்கள் சம்மந்தப்பட்ட கோட்ட கரும்பு அலுவலர்களிடம் தடையில்லா சான்று (No objection Certificate) பெற்ற பிறகே கரும்பு ஏற்றிச் செல்ல வேண்டும்.

இத்தகைய விதிகளை மீறி கரும்பு எடுத்துச் செல்லும் இடைத்தரகர்கள் மீது காவல் துறை மூலம் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் கரும்பு ஏற்றிச் செல்லும் வாகனங்களும் காவல் துறையினரால் பறிமுதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.